6. அறிவிப்பு.

இரண்டாம் துணை நிதிநிலை அறிக்கை, 1990-91 — வெட்டுத்தீர்மானங்கள் அளிப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1990—91 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் துணை மதிப்பீடுகளில் கண்டுள்ள மானியக் கோரிக்கை மீது வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்க விரும்பும் மாண்புமிகு உறுப்பினர்கள், பேரவையில் 190-வது விதிக்குட்பட்டு 23, சனவரி 1991 புதன் கிழமை மாலை 3.00 மணிக்குள், பேரவைச் செயலகத்தில் கொடுக்கவேண்டும்.

11-05 மணி.

7. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுவாக ஓர் அறிவிப்பு. நேற்று இத்தீர்மானத்தில் 2 பேர்தான் பேசியிருக்கிறார்கள். இதேவேகத்தில் போனால் அநேகமாக இன்றோடு உறுப்பினர்கள் முடித்து, நாளைக்கு முதல்வரிசைக்கு வரநேரிடும். பேசுகின்ற வாய்ப்பை அறவே இழந்துவிடுவீர்கள் என்பதை நான் சொல்லித் தெரிந்துகொள்ளவேண்டியதில்லை, நீங்களே தெரிந்துகொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன். பேசுகின்ற ஒவ்வொரு உறுப்பினரும் அவர்களுக்கு அளித்துள்ள 15 மணித்துளிகளிலோ அல்லது 10 மணித்துளிகளிலோ அதற்குள் தங்களது உரையை முடிப்பதற்குக் கண்டிப்பாக முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். மற்ற உறுப்பினர்கள் அருள் கூர்ந்து, மிகவும் கடுமையான குற்றச் சாட்டு என்பதால் குறுக்கிட்டுத்தான் ஆகவேண்டுமென்ற இன்றியமையாமை ஏற்படுகிற சூழ்நிலை தவிர, எல்லா இடத்திலும் குறுக்கிட்டுத்தான ஆகவேண்டுமென்று வற்புறுத்தி, தாங்களே வலிந்து வற்புறுத்திக்கொண்டு குறுக்கிடுவதைத் தவிர்க்கவேண்டும். அப்படியில்லாவிட்டால், பின்னால் 4—5 பேர்தான் பேசினார்கள், மற்றவர்களுக்கு பேச வாய்ப்பு இல்லை என்ற சூழல் ஏற்பட்டால் அதற்குப் பேரவைத் தலைவர் நிச்சயமாகப் பொறுப்பாக மாட்டார், நீங்களே அதற்குப் பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டியிருக்கும் என்பதை மென்மையாகவும் அதே நேரத்தில் அழுத்தமாகவும் தெரிவித்துக்கொண்டு, இப்போது திரு. க. அர்ச்சுனன் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையில் எனக்குப் பேசுகின்ற வாய்ப்பு அளித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆளுநர்